# நமது தின கனி

காலை நாளிதழ்


NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 125 | 4 Pages | 09.12.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 125 | 4 பக்கங்கள் | 09.12.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## அகமதாபாத்தில் இந்தியாவின் முதல் புல்லட் ரெயில் முனையம் வீடியோ வெளியிட்ட ரெயில்வே அமைச்சர்





குஜராத், டிச.9

குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் கட்டப்பட்டுள்ள "சபர்மதி மல்டி மாடல் டிரான்ஸ்போர்ட் ஹப்" என பெயரிடப்பட்டுள்ள இந்தியாவின் முதல் புல்லட் ரெயில் முனையத்தின் வீடியோவை ரெயில்வேத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் இன்று வெளியிட்டார்.

இந்த முனையம் அதிநவீன அம்சங்களைக் கொண்டுள்ளது மற்றும் பயணிகளுக்கு வசதியான மற்றும் சிறந்த பயண அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரெயில் அகமதாபாத் மற்றும் மும்பை இடையே இயக்கப்பட உள்ளது. ஜப்பான் அரசாங்கத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், வீடியோவை வெளியிட்ட ரெயில்வே அமைச்சர்,"இந்தியாவின் முதல் புல்லட் ரெயிலுக்கான முனையம். சபர்மதி மல்டிமாடல் போக்குவரத்து மையம், அகமதாபாத்," என்று தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. வீடியோ வெளியானதில் இருந்து 565,000க்கும் அதிகமான பார்வைகளையும் 20,000க்கும் மேற்பட்ட லைக்ஸ்களையும் குவித்துள்ளது.

மேலும், குஜராத்தில் உள்ள பிலிமோரா மற்றும் சூரத் இடையேயான 50 கிமீ தூரத்தில் உள்ள இந்தியாவின் முதல் புல்லட் ரெயில் பிரிவு ஆகஸ்ட் 2026ல் நிறைவடையும் என்று ரெயில்வே அமைச்சர் அறிவித்திருந்தார்.

## காலை, மாலை வித்தியாசம் தெரியாது: ராகுல் அலுவலகத்தை கிண்டல் செய்த பிரணாப் முகர்ஜி



புதுடெல்லி, டிச.9

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ராமீது பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பெற்றுக்கொண்டு அதானி குழுமத்திற்கு எதிராக கேள்விகள் கேட்டதாக குற்றம்சாட்டப்பட்டது. மக்களவை உறுப்பினருக்கு லாகின் மற்றும் பாஸ்வேர்டு ஆகியவற்றை வெளியில் உள்ள நபருக்கு வழங்கி பாராளுமன்ற இணைய தளத்தைப் பயன்படுத்த அனுமதித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது.


இதுகுறித்து மக்களவை நெறிமுறைக்குழு விசாரணை நடத்தி, சுமார் 500 பக்க அறிக்கையை தாக்கல் செய்தது. அதில் மொய்த்ராவின் செயல் மிகவும் ஆட்சேபணைக்குரிய, நெறிமுறையற்ற, கொடூரமான மற்றும் குற்றவியலானது. அவரை எம்.பி. பதவியில் இருந்த நீக்கவேண்டும் எனகுறிப்பிட்டிருந்தது.

இதற்கிடையே, மதிய உணவிற்கு பிறகு பாராளுமன்றம் கூடியபோது சபாநாயகர் ஓம் பிர்லா திரிணாமுல் எம்.பி. மஹுவா மொய்த்ராவை டிஸ்மிஸ் செய்து உத்தரவிட்டார். இதையடுத்து, அவரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பாராளுமன்றத்துக்கு வெளியே திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், அழிவுக்கான ஆரம்பம் இது என பா.ஜ.க.வை திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா சாடினார்.

இதுதொடர்பாக, மஹுவா மொய்த்ரா கூறுகையில், நெறிமுறைக் குழுவுக்கு டிஸ்மிஸ் அதிகாரம் இல்லை. இது உங்கள் (பாஜக) முடிவின் ஆரம்பம். என்னை வாயை மூடிக்கொண்டு அதானி விவகாரத்தை ஒழித்துவிடலாம் என இந்த மோடி அரசு நினைத்திருந்தால் அது நடக்காது. இந்த கங்காரு நீதிமன்றம் இந்தியா முழுமைக்கும் காட்டியுள்ளது என்பதை உங்களுக்குச் சொல்கிறேன். அதானி உங்களுக்கு முக்கியம். எந்த ஒரு பெண் எம்.பி.யை அடிபணிய வைக்கும்படி நீங்கள் எவ்வளவு காலம் தொல்லை கொடுப்பீர்கள் என கேள்வி எழுப்பினார்.


## காலை, மாலை வித்தியாசம் தெரியாது: ராகுல் அலுவலகத்தை கிண்டல் செய்த பிரணாப் முகர்ஜி

புதுடெல்லி, டிச.9

நாடு முழுவதும் வெங்காயத்தின் விலை கணிசமாக உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் தற்போது பெரிய வெங்காயம் கிலோ ரூ.70க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெங்காய விலை உயர்வால் மக்கள் பாதிக்கப்படாமல் தடுக்கும் நடவடிக்கையாக 2024 மார்ச் மாதம் வரை வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசுதடைவிதித்துள்ளது.வெங்காயத்தின்விலைகணிசமாகஅதிகரித்ததன் காரணமாக மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பிற நாடுகளிடமிருந்து வரும் கோரிக்கையின் அடிப்படையில் வெங்காயம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிச்சாங் புயல் நிவாரணமாக ரூ.3 கோடியை முதல்வரிடம் வழங்கியது டி.வி.எஸ். நிறுவனம்

சென்னை, டிச.9

பேரிடர் பாதிப்பில் இருந்து மக்கள் மீள்வதற்கு உதவியாக நல்லுள்ளங்கள் பலர் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்குகின்றனர்.

அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த இயற்கைப் பேரிடரில் இருந்து மீள்வதற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம். இச்சூழலில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்து இருந்தார்.

இதையடுத்து, மிச்சாங் புயல் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு டி.வி.எஸ். நிறுவனம் ரூ.3 கோடி வழங்கியுள்ளது.

டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமை செயலகத்தில் சந்தித்து காசோலையை வழங்கினார். அப்போது தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா உடன் இருந்தார்.



# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தால் பாதிப்பை தவிர்த்திருக்கலாம்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, டிச.9

சென்னை ராயப்பேட்டையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கனமழையால் மக்கள் பாதிக்கப்பட்டதற்கு முழு பொறுப்பு தி.மு.க. அரசுதான்.

புயல் மழைக்கு அரசு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5 நாட்கள் கடந்த பின்பும் தற்போது வரை பல பகுதிகளில் மழைநீர் வடியவில்லை.

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை தி.மு.க. அரசு அலட்சியப் படுத்தியதால் தான் கடும் பாதிப்பு.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ முகாம்களை நடத்த வேண்டும்.

தேங்கிய மழைநீரை அப்புறப்படுத்த தேவையான ராட்சத மோட்டார்களை தயார் நிலையில் வைத்திருக்கவில்லை. எங்கு பார்த்தாலும் குளம்போல் தண்ணீர் தேங்கி நிற்கிறது.



தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்கிய நிதியை தி.மு.க. அரசு முறையாக பயன்படுத்த வேண்டும்.


அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மழைக்காலங்களில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் பாதிப்புகளை தவிர்த்திருக்கலாம்.

2015ம் ஆண்டு புயல் பாதிப்பை அ.தி.மு.க. அரசு திறமையாக சமாளித்தது.

பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு மக்கள் தகுந்த பதில் அளிப்பார்கள் என தெரிவித்தார்.

# மிச்சாங் புயல்வெள்ளம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் 162 வீடுகள் இடிந்தன



காஞ்சிபுரம், டிச.9

மிச்சாங் புயல் வரலாறு காணாத மழையை கொட்டித்தீர்த்தது. இதானால் காஞ்சிபுரம் மாவட்டத்திலும் பலத்த வெள்ள சேதம் ஏற்பட்டு உள்ளது. பெரும்பாலான இடங்களில் மழை வெள்ளம் வடிந்தாலும் குன்றத்தூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பகுதிகளில் மிக கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

மிச்சாங் புயல் மற்றும் மழை வெள்ளத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் 162 வீடுகள் சேதம் இடிந்து சேதம் அடைந்து உள்ளன. மேலும் 65 கால்நடைகள் இறந்துள்ளன.

பலத்த மழை காரணமாக மாவட்டத்தில் 205 ஏரிகள் முழுவதும் நிரம்பி உள்ளது. குன்றத்தூர் தாலுகாவில் வரதராஜபுரம் அய்யப்பன்தாங்கல், கெருகம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பல இடங்களில் இன்னும் மின்சாரம் தடைபட்டு உள்ளது. அதனை சரிசெய்யும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

வரதராஜபுரம் ஊராட்சியில் வெள்ளநீர் சூழ்ந்த பகுதிகளான ராயப்பா நகரில் கலெக்டர் கலைச்செல்வி மோகன் படகில் சென்று மக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார்.

குன்றத்தூர் சோமங்கலம் பெரிய ஏரியில் கரை பலவீனமாகி மண் சரிவு ஏற்பட்டதால் நீர் வளத் துறை சார்பில் மண் மூட்டைகளை அடுக்கி கரையை பலப்படுத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஸ்ரீபெரும்புதூர் அருகே பிள்ளைப்பாக்கம் ஏரி வளர்புரம் ஏரி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட ஏரிகளின் உபரிநீர் செம்பரம்பாக்கம் ஏரிக்கு தொடர்ந்து வருகிறது. ஸ்ரீபெரும்புதூர் அருகே தண்டலம் பகுதியை கடந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு தண்ணீர் செல்லும் கிருஷ்ணா கால்வாயில் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

குன்றத்தூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரணிபுத்தூர் ஊராட்சியில் ஜோதி நகர் லட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. அய்யப்பன் தாங்கல் பகுதியில் பிரபு நகரில் வீட்டிலிருந்து வெளியே வர முடியாத அளவுக்கு மழைநீர் தேங்கி நின்றது. இதில் சிக்கிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மாத குழந்தை உட்பட 5 பேரை தீயணைப்பு வீரர்கள் படகு மூலமாக பத்திரமாக மீட்டனர்.

குன்றத்தூர் மணிகண்டன் நகரில் வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 8 பேர் படகு மூலம் மீட்கப்பட்டனர். மாங்காடு, சாதிக்நகர், ஓம்சக்தி நகர், சக்கரா நகர், கொளப்பாக்கம், மனப்பாக்கம், பழந்தண்டலம் உள்ளிட்ட பகுதியில் மழை நின்றும் வெள்ளநீர் வடியாததால் மக்கள் தவித்து வருகிறார்கள்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சிக்கு உட்பட்ட தென்பாளை ஊராட்சி 53.50லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கால்நடை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார் உடன்.மேல்மலையனூர்ஒன்றிய குழு கண்மணி நெடுஞ்செழியன்.கல்வி குழு தலைவர் மாவட்ட கவுன்சிலர் சாந்தி சுப்பிரமணியன் கால்நடை உதவி இயக்குனர் ராஜேந்திரன் மற்றும் கிராம பொதுமக்கள் ஏராளமான பங்கேற்று கால்நடை மருத்துவமனையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் செஞ்சி அமைச்சர் மஸ்தான் தென்பாலை ஊராட்சியில்மிக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது ஏராளமான பொதுமக்கள் ஒன்று கூடி கால்நடை மருத்துவமனை திறந்து வைத்த போதுகிராமத்தின் உள்ள அனைத்து பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்

# வாகனம் மோதிய விபத்தில் வாலிபர் படுகாயம்

அந்தியூர், டிச.9

அந்தியூர் தாலுக்கா அத்தானி அருகே செம்பளிச்சம்பாளையம் பிரிவில் காசி யண்ணன் வயது 72 TN 36BV1336 என்ற மின்சார இரண்டுசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது அவருக்கு பின்பு வந்த பல்சர் இரண்டுசக்கர வாகனம் வண்டி எண்TN 36BV 6549 அதிக வேகத்தில் பவானியில் இருந்தது சக்தியமங்கலத்தை நோக்கி வேகமாக சத்தியமங்கலம் பண்ணாரி கல்லூரியில் இன்ஜினியர் முதலாம் ஆண்டு படிக்கும் பவானியை சார்த்த மாணவர் வைத்தீஸ்வரன் ஓட்டி வந்த வண்டி காசியண்ணன் ஓட்டி வந்த மின்சார வாகனத்தின்மீதுபின்புறம் இடித்த வேகத்தில் 25 அடி தூரம் தார்சாலையில் இழுத்து சென்றது தலையில் மிக பலத்த காயத்துடன் 108 வாகனத்தில் அவரை கோபி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு பின்பு மேல் சிகிச்சையாக தனியார் மருத்துவமனை கோயமுத்தூர் சரவணம்பட்டி குமரன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் இது சம்மதமாக ஆப்ப கூடல் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு விசாரித்து வருகிறார்.






விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தாலுக்கா வளத்தி பிரதம மந்திரி.முதலமைச்சர் மருத்துவ காப்பீடு 5 லட்சத்திற்கான காப்பீடு இலவசமாக பதிவிறக்கம் செய்வதற்கு மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் துவக்கி வைத்தார்




அமைச்சர்கள் சாமிநாதன் மற்றும் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் எதிரில் உள்ளதனியார்திருமணமண்டபத்தில் மாவட்டநிர்வாகத்தின்சார்பில் அனுப்பி வைக்கப்படும் மிக்ஜாம் புயல் நிவாரணப் பொருட்களை பார்வையிட்டார்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை

திருவள்ளூர், டிச.9

திருவள்ளூர் மாவட்டம் இன்னும் மழை வெள்ள பாதிப்பில் இருந்து மீளாமல் உள்ளது. மாவட்ட கலெக்டர் பிரபு சங்கர் உத்தரவுப்படி நிவாரண ப்பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

மழைநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் மீட்பு பணிகள், மற்றும் வெள்ள நீரை வெளியேற்றும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, மீஞ்சூர், பழவேற்காடு, நசரத்பேட்டை, திருமழிசை, காட்டுப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. மழைநீர் இன்னும் வடியவில்லை.

பழவேற்காடு ஆண்டார் மடம், தாங்கள் பெரும்புலம் , எடமணி, வைரங்குப்பம், நக்கத் துறவு, கோரை குப்பம், உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களை சுற்றிலும் மழை நீர் இன்னும் வடியாமல் உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் படகில் சென்று வருகின்றனர். இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டு உள்ளது. சாலை முழுவதிலும் மழை நீர் சூழ்ந்து காணப் படுகின்றன.



பலத்த காற்று காரணமாக பழவேற்காடு சுற்றியுள்ள பகுதிகளில் மின்கம்பங்கள் பலத்த சேதம் அடைந்தன. இதனால் 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5வது நாளாக இன்றும் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளது.

இதேபோல் மழை வெள்ளம் காரணமாக பொன்னேரி, மீஞ்சூர் பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கி உள்ளன.

பொன்னேரி அடுத்த சின்ன காவனம், பெரிய காவனம், உப்பளம் பகுதியில் கடந்த 4 நாட்களாக குடிநீர், மற்றும் மின்சாரம் இல்லாததால் அப்பகுதி பொது மக்கள் அவதிப் பட்டு வருகின்றனர். நேற்று இரவு அவர்கள் மின்சாரம் வழங்க கோரி பொன்னேரிபழவேற்காடு நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பங்குகளில் பெட்ரோல் டீசல்இல்லாததால்பொன்னேரியில் இருந்து பாட்டில்களில் வாங்கப்படும் பெட்ரோலை சிலர் ஒரு லிட்டர் ரூ.140 க்கு விற்பனை செய்து வருகின்றனர்.

மீஞ்சூர் ஒன்றியம் அத்திப்பட்டு மற்றும் அனுப்பப்பட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆழ்துளைக் கிணறுகள் வன்னிப்பாக்கம் கொசஸ்தலை ஆற்றில் இருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் 40க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுக்கு குழாய் வழியாக அனுப்பப்பட்டு வருகின்றன.

கொசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் 34 மின் மோட்டார்கள் நீரில் மூழ்கி பழுதானது. இதனால் 5 நாட்களாக கிராமங்களுக்கு குடிநீர் அனுப்பவில்லை. பழுதடைந்த மின்மோட்டர்களை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர் சன்முகநாதன், மேற்பார்வை பொறியாளர் செல்வராஜ், நிர்வாகப் பொறியாளர் அமலதீபன், உதவிப் பொறியாளர்கள் சம்பத், தமிழ்மணி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1146 ஏரிகளில் 784 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. மாவட்டத்திர் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கி இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இதனால் புல்லரம்பாக்கம் பகுதியில் மட்டும் 180 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளது. விவசாய நிலங்களில் தேங்கிய மழைநீரை மோட்டார் மூலம் வெளியேற்றும் பணியில் விவசாயிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

# லாட்ஜ் அறையில் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்த மேலாளர்: போலீசார் விசாரணை

நாகர்கோவில், டிச.9

குமரி மாவட்டம் சுசீந்திரம் அருகே உள்ள தேரூர் பகுதியை சேர்ந்தவர் கருப்பசாமி (வயது 78). இவரது மனைவிகாந்திமதி. கடந்த 2002ம் ஆண்டு கருப்பசாமியின் மனைவி காந்திமதி இறந்து விட்டார்.

இவர்களுக்கு கிருஷ்ணமூர்த்தி என்ற மகனும், 2 மகள்களும் உள்ளனர். மகன் மற்றும் மகள்களுக்கு திருமணம் ஆகி விட்டது. மகன் கிருஷ்ணமூர்த்தி தனது மனைவியுடன் நெல்லையில் வசித்து வேலை பார்த்துவருகிறார்.மேலும் இரண்டு மகள்களும் திருமணமாகி வெளியூரில் வசித்து வருகிறார்கள்.

இதனால் கருப்பசாமி நாகர்கோவில் வடிவீஸ்வரன் பகுதியில் உள்ள லாட்ஜ் ஒன்றில் மேலாளராக வேலை பார்த்து வந்தார். லாட்ஜிலேயே தங்கி வேலை பார்த்து வந்த நிலையில், இன்று காலை அவரை திடீரென காணவில்லை.

லாட்ஜ் உரிமையாளர் சுப்பிரமணியம் அவரை பலமுறை தொடர்பு கொண்டார். ஆனால் செல்போனை எடுக்கவில்லை. இதையடுத்து லாட்ஜில் உள்ள அறைகளை சோதனை செய்து பார்த்தபோது ஒரு அறையில் கருப்பசாமி ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த லாட்ஜ் உரிமையாளர், கோட்டார் போலீசுக்கும், நெல்லையில் உள்ள அவரது மகன் கிருஷ்ணமூர்த்திக்கும் தகவல் தெரிவித்தார். உடனே போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சத்திய சோபன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினார்கள்.



பிணமாக கிடந்த கருப்பசாமி, லாட்ஜில் உள்ள அறையில் கழிவறைக்கு சென்று விட்டு திரும்பியபோது நிலைதடுமாறி கீழே விழுந்ததில் தலையில் காயம் ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. போலீசார் இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்டனர்.

மேலும் அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராவின் காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர். அதில் அதிகாலையில் கருப்பசாமி வெளியே செல்வது போன்ற காட்சிகள் இருந்தது. அந்த காட்சிகளை போலீசார் கைப்பற்றி உள்ளனர். மேலும் கருப்பசாமியின் மகனிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது கருப்பசாமி தனது தந்தை கடந்த 15 ஆண்டுகளாக லாட்ஜில் மேலாளராக வேலை பார்த்து வருவதாகவும், பேரக்குழந்தைகளை பார்ப்பதற்கு அவ்வப்போது ஊருக்கு வருவதாகவும் கூறினார். கடந்த சில நாட்களுக்கு முன்பும் ஊருக்கு வந்த கருப்பசாமி, தற்போது லாட்ஜிலேயே இருப்பதாக தெரிவித்தார்.

வழக்கமாக கருப்பசாமி ஆட்கள் இல்லாதபோது மேற்கத்திய கழிவறையை பயன்படுத்தி வந்தார். அதேபோல் இன்று காலையிலும் ஆளில்லாத அறையில் உள்ள மேற்கத்திய கழிவுறையை பயன்படுத்திவிட்டு வெளியே வந்தபோது நிலை தடுமாறி கீழே விழுந்து தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மழை வெள்ளத்தில் 3 தரைப்பாலங்கள் உடைந்தன வாகன போக்குவரத்து துண்டிப்பு

கூடுவாஞ்சேரி, டிச.9

மிச்சாங் புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பலத்த மழை கொட்டித்தீர்த்தது. இதனால் சாலைகள், மற்றும் குடியிருப்புகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

இன்னும் பல இடங்களில் தண்ணீர் வடியாமல் உள்ளதால் மக்கள் தவித்து வருகிறார்கள்.

நந்திவரம் கூடுவாஞ்சேரி பகுதியில் பெய்த கன மழையால் அனைத்து இடங்களும் வெள்ளக்காடாக மாறியது. இதனால் தாழ்வான இடங்களில் தண்ணீர் சூழ்ந்து மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது வெள்ளம் வடிந்து மக்களின் இயல்பு நிலை மெல்ல, மெல்ல திரும்பி வருகிறது.



இந்த நிலையில் மழை வெள்ளத்தில் நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு உட்பட்ட 1வது வார்டு அருள்நகர், ஜெகதீஷ் நகர், 8வது வார்டில் உள்ள காமாட்சி நகர் ஆகிய 3 இடங்களில் உள்ள தரைப் பாலம் அடித்து செல்லப் பட்டன. இதனால் அப்பகுதிகளில் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டு உள்ளன. ஆதனூர், மாடம்பாக்கம், படப்பை, சோமங்கலம் செல்வதற்கான இந்த தரைப்பாலங்கள் உடைந்ததால் அந்தப் பகுதியில் இருந்து கூடுவாஞ்சேரி வருவதற்கும் அதே போல் கூடுவாஞ்சேரியில் இருந்து செல்லும் வாகனங்களும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுற்றி செல்லும் நிலை ஏற்பட்டு உள்ளது.

# வேதாரண்யம் மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படையினர்

வேதாரண்யம், டிச.9

கடந்த பல நாட்களாக புயல் சின்னம் காரணமாக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லாமல் இருந்தனர். இதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டது.

பின்னர் மின்வளத்துறை சார்பில் விடுக்கப்பட்ட தடை நீக்கியதால் அவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர்.

நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா வெள்ள பள்ளத்தைச் சேர்ந்தவர் பக்கிரி சாமி (வயது 40). இவருக்கு சொந்தமான பைபர் படகில் படகு உரிமையாளர் பக்கிரிசாமி மற்றும் அதே பகுதியை சேர்ந்த ராஜ்குமார் (33) சக்திவேல் ( 46) ஆகிய 3 பேரும் கோடியக்கரையில் தங்கி மீன் பிடித்து வருகின்றனர்.



நேற்றுமதியம் 3பேரும் கோடியக்கரையில் இருந்து மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் கோடியக் கரைக்கும் தென்கிழக்கு 10 கடல் மைல தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது இலங்கை கடற்படையில் நள்ளிரவில் வந்து 15 கிலோ வலையை வெட்டி உள்ளனர். பின்பு மீனவர்களை தாக்கி விரட்டி அடித்து விட்டு சென்று விட்டனர். பாதிக்கப் பட்ட மீனவர்கள் இன்று காலை 11 மணிக்கு கோடியக் கரைக்கு வந்து சேர்தனர்.

இது குறித்து மீனவர்கள் வேதாரண்யம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.



அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் கலெக்டர் கிறிஸ்துராஜிடம் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் டாலர் அப்பேரல்ஸ் ஏற்றுமதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராமமூர்த்தி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கணக்கம்பாளையம் பிரபு முதல் கணக்கம்பாளையம் எல்லை வரை 2 கி.மீ. நீளத்திற்கு வடிகால் அமைப்பதற்கு திட்ட மதிப்பீட்டிற்கு டாலர் அப்பேரல்ஸ் ஏற்றுமதி நிறுவனத்தின் சார்பில் 50 சதவீத பங்களா காசோலையை வழங்கினார்.

# சென்னை சகஜ நிலைக்கு திரும்ப ஓரிரு வாரங்கள் ஆகும்: சபாநாயகர் அப்பாவு





நெல்லை, டிச.9

நெல்லையில் சபாநாயகர் அப்பாவு இன்று நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னை சகஜ நிலைக்கு திரும்ப இன்னும் ஓரிரு வாரங்கள் தேவைப்படும். உள்ளூர் மற்றும் வெளியூர் பணியாளர்கள்தீவிரமாகபணி செய்து வருகின்றனர். முதலமைச்சர் ஒரு மாத சம்பளத்தை கொடுப்பதாக சொன்னால் அனைத்து எம்.எல்.ஏக்களும் கொடுத்து விடுவார்கள்.

நானும் எனது ஒரு மாத சம்பளத்தை கொடுக்கிறேன். பொத்தாம் பொதுவாக ரூ.4 ஆயிரம் கோடி செலவு செய்ததாக சொல்லக்கூடாது. மக்களையும் வெள்ள நிவாரண பணிகளுக்கு உதவிக்கு அழைத்ததில் தவறில்லை.

அரசை வெள்ள தடுப்பு பணிகளில் செய்த செயலை விமர்சனம் செய்தால் அங்கு பணி செய்யும் அதிகாரிகளின் பணிகளை கொச்சைப்படுத்துவதைபோல் உள்ளது. ரூ.4 ஆயிரம் கோடி பணத்தினை செலவு செய்ததால் தான் மழையால் சேர்ந்த நீர் உடனடியாக வடிந்துள்ளதை பார்க்க முடிகிறது. இவ்வாறு அவர் கூறினார்

# தி.மு.க. எம்.பி.யை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ.க.வினர் கைது







தருமபுரி, டிச.9

தருமபுரி பாராளுமன்ற தொகுதி எம்.பி. டாக்டர் செந்தில்குமார் பாராளுமன்றத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்தி பேசும் மாநிலங்களில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற முடியும். தென் மாநிலங்களில் வெற்றி பெற முடியாது. இந்தி பேசும் மாநிலங்களை கோமூத்ரா மாநிலங்கள் என குறிப்பிட்டார். இதனை கண்டித்து தமிழகத்தில் பா.ஜ.க.வினர் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தருமபுரி மாவட்ட பா.ஜ.க. சார்பில் மாவட்ட தலைவர் பாஸ்கர் தலைமையில் சுமார் 50க்கும் மேற்பட்ட கட்சியினர் எந்தவித முன்அறிவிப்பின்றி திடீரென்று தருமபுரி பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பாதுகாப்புபணியில்ஈடுபட்ட போலீசார் அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட கூடாது என்று பா.ஜ.க.வினரை தடுத்து நிறுத்தினர். ஆனாலும், அவர்கள் கலைந்து செல்லாமல் அங்கேயே நின்று கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது 50க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினரை போலீசார் கைது செய்து போலீஸ் வாகனத்தில் அழைத்து சென்றனர்.

கைதான பா.ஜ.க.வினரை தருமபுரியில் உள்ளதனியார்திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சரணடைந்த ஜீவல்லர்ஸ் உரிமையாளரை காவலில் எடுத்து விசாரிக்க போலீசார் முடிவு

திருச்சி, டிச,9

திருச்சி கரூர் பைபாஸ் ரோடு பகுதியில் பிரணவ் ஜூவல்லர்ஸ் என்ற நகைக்கடை இயங்கி வந்தது. இதன் கிளை நிறுவனங்கள் திருச்சி மலைக்கோட்டை, மதுரை, கும்பகோணம் உள்பட 8 இடங்களில் செயல்பட்டு வந்தன.

இந்த நிறுவனம் சில கவர்ச்சிகரமான அறிவிப்புகளை வெளியிட்டது. இதனை நம்பி ஏராளமானவர்கள்கோடிக்கணக்கிலும் லட்சக்கணக்கிலும் மேற்கண்ட நிறுவனங்களில் முதலீடு செய்தனர். பின்னர்கடந்த மாதம் அதன் இயக்குனர்கள் மற்றும் நிர்வாகிகள் திடீரென முதலீட்டாளர்களுக்கு பணம் கொடுப்பதை நிறுத்தினர். அதைத்தொடர்ந்து திருச்சி உட்பட அனைத்துகிளைகளிலும் வாடிக்கையாளர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

பின்னர் பல்வேறு இடங்களில் வாடிக்கையாளர்கள் புகார் அளித்தனர்.

அதன் பேரில் திருச்சி பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் பிரணவ் ஜூவல்லர்ஸ் இயக்குனர்கள் மதன் அவருடைய மனைவி கார்த்திகா மேலாளர் நாராயணன்உள்படசிலர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். அந்த நகைக்கடை கிளைகளில் போலீசார் அதிரடி சோதனை நடத்தி 80 கிலோ வெள்ளி, சுமார் 110 பவுன் தங்க நகை ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

பின்னர் அதன் மேலாளர் நாராயணனை கைது செய்தனர். இயக்குனர்கள் மதன், கார்த்திகா ஆகிய இருவரும் தலைமறைவாக இருந்தனர். போலீசார் அவர்களை வலைவீசி தேடி வந்தனர். மேலும் இருவரும் வெளிநாடு தப்பிச்செல்லாமல் தடுக்கலுக் அவுட் நோட்டீசும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று மதுரையில் உள்ள முதலீட்டாளர்கள்பாதுகாப்பு சிறப்பு நீதிமன்றத்தில் மதன் சரணடைந்தார். அதைத் தொடர்ந்து அவரை வருகிற 21ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி ஜோதி உத்தரவிட்டார். பின்னர் மதன் மதுரை மத்திய ஜெயிலில் அடைக்கப்பட்டார். மதன் மீது 1500க்கும் மேற்பட்டோர் புகார் அளித்தனர்.

மேலும் தற்போது வரையிலும் தினமும் 10 பேர், 20 பேர் தொடர்ச்சியாக புகார் அளித்து வருகின்றனர்.

ஆகவே மோசடி தொகை மேலும் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் சரணடைந்த மதனை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க திருச்சி பொருளாதார குற்றப்பிரிவு துணை போலீஸ் சூப்பரண்டு லில்லி கிரேசி மதுரை விரைந்துள்ளார்.

இன்று மதுரை முதலீட்டாளர் பாதுகாப்பு சிறப்பு நீதிமன்றத்தில் காவலில் விசாரிக்க அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்கிறார்.

அவரை காவலில் எடுத்து விசாரிக்கும்போது மேலும் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே பொதுமக்களிடம் மோசடி செய்த பணத்தில் மதன் திருச்சி கும்பகோணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நிலம் வாங்கி குவித்துள்ளார்.

அந்த சொத்துக்களை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தலைமறைவாக இருக்கும் கார்த்திகாவை போலீசார் தேடி வருகின்றனர்.

# டிரைவர் கொலையில் முக்கிய தடயம் சிக்கியது: 4 பேர் கும்பலுக்கு வலைவீச்சு

நெல்லை, டிச.9

நெல்லை அருகே உள்ளகீழமுன்னீர்பள்ளம் பகுதியை சேர்ந்தவர் விக்கிரமாதித்தன். இவரது மகன் வீரபுத்திரன்(வயது 28). லோடு ஆட்டோ டிரைவர்.

இவர் நேற்று இரவு அங்குள்ள பயணிகள் நிழற்குடையில் நண்பர்களுடன் பேசிவிட்டு வீட்டுக்கு புறப்பட்டார். அப்போது அங்கு காரில் வந்த 4 பேர் கும்பல் கண்ணிமைக்கும் நேரத்தில் வீரபு த்திரனை சரமாரியாக வெட்டிவிட்டு காரில் தப்பிச்சென்றது. உடனடியாக அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு நெல்லை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்த நிலையில்சிறிது நேரத்திலேயே சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து முன்னீர்பள்ளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இன்னோஸ்குமார்வழக்குப்பதிவு செய்து கொலைக்கான காரணம் என்ன? கொலையாளிகள் யார்? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொலையாளிகளை பிடிப்பதற்காக போலீஸ் சூப்பிரண்டு சிலம்பரசன் மேற்பார்வையில் செயல்படும் தனிப்படை உள்பட மொத்தம் 5 தனிப்படை போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீரபுத்திரனை கொன்ற கும்பல் காரில் வந்து சென்றுள்ளதால் நெல்லைஅம்பை நெடுஞ்சாலையில் முன்னீர்பள்ளம் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராக்களை போலீசார் ஆய்வு செய்தனர்.

அதில் அந்த கும்பல் வெள்ளை நிற காரில் வந்துள்ளது தெரிய வந்துள்ளது. அந்த காரின் பதிவெண் கேமராவில் பதிவாகி உள்ளதால் அந்த எண்ணை வைத்து போலீசார் தேடி வருகின்றனர். அந்த காரின் உரிமையாளர் தச்சநல்லூர் அருகே உள்ள மேலக்கரை பகுதியை சேர்ந்த ஒரு வாலிபர் என்பது தெரிய வந்துள்ளது. அந்த வாலிபரை வீட்டுக்கு தேடி சென்றபோது அவர் தலைமறைவாகிவிட்டார். இதனால் அவர் இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகம் அடைந்துள்ளனர்.

அதே நேரத்தில் மேலக்கரை, மேலப்பாளையம், பாளை ஆகிய பகுதிகளை சேர்ந்த 3 வாலிபர்கள் மீது போலீசார் சந்தேகம்அடைந்துஅவர்களை தேடி வருகின்றனர். அவர்களை பிடித்து விசாரணைநடத்திய பின்னரே கொலைக்கான காரணம் தெரியவரும் என்று போலீசார் தெரிவித்தனர்

# கந்து வட்டி கொடுமையால் இளம்பெண் தற்கொலை

விருத்தாசலம், டிச.9

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் ஆலடி ரோடு காமராஜர் நகரை சேர்ந்தவர்தினேஷ்குமார் (29).

இவர் சி.சி.டி.வி. விற்பனைசெய்யும்கடை நடத்தி வருகிறார்.

இவரது மனைவி செல்வி (25). இவர்களுக்கு திருமணமாகி 3 வருடம் ஆகிறது. பெண்குழந்தை உள்ளது. தினேஷ் குமார் விருத்தாசலம் பகுதியை சேர்ந்த முருகனிடம் வட்டிக்கு பணம் வாங்குவது வழக்கம். ஏற்கனவே பணம் வாங்கி அதனை வட்டியுடன் கட்டி உள்ளார்.

தற்போது தினேஷ் குமார், முருகனிடம் ரூ. ஒன்றரை லட்சம் பணம் கடனாக வாங்கி இருந்தார். அதற்கு வாரம் ரூ. 6 ஆயிரம் கட்ட வேண்டும் என முருகன் கூறியதாக தெரிகிறது.

இந்த நிலையில் தினேஷ்குமாரால் பணம் கட்டதாமதம்ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த 5 பேர் கும்பல் விருத்தாசலம் பஸ் நிலையத்தில் உள்ள ஒரு லாட்ஜில் தினேஷ் குமாரை அடைத்து வைத்து பணம் கேட்டு மிரட்டி உள்ளனர்.

பின்னர் தினேஷ் குமாரை அவரது மனைவிக்கு போன் செய்ய சொல்லி அவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாக தெரிகிறது.

பின்னர் தினேஷ் குமாரை விடுவித்தனர். கந்து வட்டி கும்பல் திட்டியதால் வேதனை அடைந்த செல்வி தனது வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து விருத்தாசலம் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து செல்வி உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

கந்து வட்டி கும்பல் திட்டியதால் மனம் உடைந்த இளம்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் விருத்தாசலத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஒசூரில் ரூ.5.30 லட்சம் மதிப்பிலான குட்கா பொருட்கள் கடத்திய டிரைவர் கைது






ஒசூர், டிச.9

ஒசூர் சிப்காட் போலீசார் நேற்று மாலை, ஜூஜூவாடி சோதனைச் சாவடி பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு சரக்கு வேனை, தடுத்து நிறுத்தி சோதனையிட்டனர்.

அதில், 80 மூட்டை மற்றும் 4 அட்டைப்பெட்டிகளில் 640 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், பான் மசாலா உள்ளிட்ட தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் சந்தை மதிப்பு ரூ.5, 30,000 ஆகும். இதனை சரக்கு வேனுடன் பறிமுதல் செய்த போலீசார், மேலும் விசாரணை நடத்தியதில், கர்நாடக மாநிலம் பெங்களூரிலிருந்து விற்பனைக்காக சேலம் பகுதிக்கு அந்த குட்கா பொருட்களை கடத்தி சென்றது தெரிய வந்தது.

இதையடுத்து வேன் டிரைவர் அஜித்குமார் (26) என்பவரை போலீசார் கைது செய்தனர். இவர் சேலம் சன்னியாசி குண்டு குமரகிரி பேட்டையை சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. அவரிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



அமைச்சர்கள்சாமிநாதன்,கயல்விழிசெல்வராஜ்ஆகியோர்தலைமையில்திருப்பூர்கலெக்டர்அலுவலகத்தில் வேளாண்மைத்துறை, கால்நடை அராமரிப்புத்துறை, மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் பால்வளத்துறை ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலெக்டர் கிறிஸ்துராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# போலி பணி நியமன ஆணை கொடுத்து ரூ.4 லட்சம் மோசடி செய்தவர் கைது



தூத்துக்குடி, டிச.9

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஹைஸ்கூல் தெருவைச் சேர்ந்தவர் பசும்பொன் முத்துராமலிங்கம் (வயது 38).

தூத்துக்குடி புதிய பஸ் நிலையத்தில் வைத்திருந்த வெளிநாட்டு வேலைக்கான விளம்பரத்தை பார்த்து நியூசிலாந்திற்கு வேலைக்கு செல்ல வேண்டும் என்று கருதி அதில் உள்ள தொலைபேசி எண்ணை அழைத்துள்ளார்.

அதில் பேசிய சிவகங்கை மாவட்டம் டி. புதூர் ஆக்ஸ்போர்டு நகரைச் சேர்ந்த ரகுபதிராஜன்(48)என்பவர், வெளிநாட்டில் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால் ரூ.4 லட்சம் ஆகும் என்று கூறி உள்ளார்.

இதை நம்பிய பசும்பொன்முத்துராமலிங்கம் கடந்த ஆண்டு ஜனவரி 22ந் தேதி முதல் இந்த ஆண்டு மே மாதம் 19ந் தேதி வரை மொத்தம் ரூ.4 லட்சம் பணத்தை அவருக்கு அனுப்பி உள்ளார்.

அதனை ரகுபதி ராஜன் பெற்றுக்கொண்டு பசும்பொன் முத்துராமலிங்கத்தை வெளிநாட்டிற்கு வேலைக்கு அனுப்பாமலும், பணத்தை திருப்பி கொடுக்காமலும் ஏமாற்றி மோசடி செய்துள்ளார்.

இதனால் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த பசும்பொன்முத்துராமலிங்கம் தூத்துக்குடி மாவட்ட போலீஸ்சூப்பிரண்டிடம் புகார் அளித்துள்ளார்.

இதனை தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பாலாஜி சரவணன் உத்தரவின்படி மாவட்ட குற்றப்பிரிவு டி.எஸ்.பி. (பொறுப்பு) சிவசுப்பு மேற்பார்வையில் மாவட்ட குற்ற பிரிவு இன்ஸ்பெக்டர் அந்தோணியம்மாள், சப்இன்ஸ்பெக்டர் முருகன், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர்கள் சண்முகசுந்தரம், ராஜ்குமார், மோகன்ஜோதி ஆகியோர் விசாரணை நடத்தினர்.

இதில் ரகுபதிராஜன் இதே போன்று பலரையும் வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி ரூ.2 கோடி வரை மோசடி செய்து ஏமாற்றியுள்ளது தெரியவந்துள்ளது.

இதைத்தொடர்ந்து அவரை போலீசார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர் படுத்தி தூத்துக்குடி மாவட்டம் பேரூரணி சிறையில் அடைத்தனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 09.12.2023



# படம் இயக்குவதில் ஆர்வம் காட்டும் தனுஷ்

தனுஷ் தற்போது அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் 'கேப்டன் மில்லர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதையடுத்து தனுஷ் 50வது படத்தை அவரே இயக்கி நடிக்கிறார். சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தனுஷின் 50வது படம் வட சென்னை சார்ந்த படம் என்பதால் இசையமைப்பாளர் தேவாவை வில்லானாக நடிக்க வைக்க தனுஷ் அணுகியுள்ளார். ஆனால், தேவா தனக்கு வசனங்களை மனப்பாடம் செய்வது கடினமாக இருக்கும் என்று மறுத்துவிட்டதாக தகவல் வெளியானது.

இந்நிலையில், நடிகர் தனுஷ் மீண்டும் படம் இயக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், "தனுஷ் மூன்றாவதாக படம் இயக்கவுள்ளார். இந்த படத்தில் அவரின் சொந்தகாரர் மகன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இந்த படத்திற்கும் நான் தான் இசையமைக்கவுள்ளேன். விரைவில் இது குறித்த அறிவிப்பு வெளியாகும்" என கூறியதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அன்னம் வழங்கிய அன்னபூரணி படக்குழு நெகிழ்ச்சியில் மக்கள்



'மிச்சாங்' புயல் காரணமாக சென்னை நகரின் பெரும்பாலான பகுதிகள் மழைநீரால் சூழப்பட்டுள்ளன. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் அரசு சார்பில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதைத்தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அமைப்பினர் உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். நடிகர்கள், தன்னார்வலர்கள் என பலர் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், அன்னபூரணி படக்குழு புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கியுள்ளனர். இது தொடர்பான புகைப்படத்தை தயாரிப்பு நிறுவனம் தங்களது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளது. இயக்குனர் நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் சமீபத்தில் திரையரங்குகளில் வெளியான திரைப்படம் 'அன்னபூரணி' என்பது குறிப்பிடத்தக்கது.

# மிச்சாங் புயலில் சிக்கி தவித்தவர்களுக்கு உதவிய 'வெப்பன்' படக்குழு



கடந்த சில நாட்களாக 'மிச்சாங்' புயல் காரணமாக சென்னை நகரின் பெரும்பாலான பகுதிகள் மழைநீரால் சூழப்பட்டுள்ளன. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் அரசுசார்பில் முழுவீச்சில் நடைபெற்றுவருகின்றன.

இதைத்தொடர்ந்து, பல திரைப்பிரபலங்களும் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தங்களது உதவிக்கரத்தை நீட்டி வருகின்றனர். இந்த வரிசையில் நடிகர்கள் சத்யராஜ், வசந்த் ரவி, தான்யா ஹோப் நடித்துள்ள 'வெப்பன்' திரைப்படக்குழுவும் இணைந்துள்ளது.

இதன் தயாரிப்பாளர் மில்லியன் ஸ்டுடியோஸ் எம். எஸ். மன்சூர் மற்றும் அவரது குழுவினர் மதுரவாயல், பள்ளிக்கரணை, வளசரவாக்கம் என சென்னையின் ஏரி சூழ்ந்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2000 உணவுப் பொட்டலங்கள் மற்றும் மளிகை சாமான்கள் அடங்கிய 400 பெட்டிகளைக் கொடுத்து உதவியுள்ளனர். 'வெப்பன்' படக்குழுவின் இந்த நெகிழ்ச்சியான செயலுக்கு உதவி பெற்ற மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# 'கலைஞர் 100' விழா தேதி மாற்றம்

கலைஞர்
100
1924 - 2023

'மிச்சாங்' புயல் காரணமாக சென்னை நகரின் பெரும்பாலானபகுதிகள்மழைநீரால்சூழப்பட்டுள்ளன. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் அரசு சார்பில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இதைத்தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அமைப்பினர்உதவிக்கரம்நீட்டிவருகின்றனர்.நடிகர்கள், தன்னார்வலர்கள் என பலர் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், அன்னபூரணி படக்குழு புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கியுள்ளனர்.

இதுதொடர்பானபுகைப்படத்தைதயாரிப்புநிறுவனம் தங்களது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளது. இயக்குனர் நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் சமீபத்தில் திரையரங்குகளில் வெளியான திரைப்படம் 'அன்னபூரணி' என்பது குறிப்பிடத்தக்கது.

# யாரும் காணாத விண்மீனே கவனம் ஈர்க்கும் பைட் கிளப் பாடல்



அப்பாஸ் ஏ ரஹ்மத் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'பைட் கிளப்' (Fight Club). இந்த படத்தில் 'உறியடி' விஜய்குமார் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், கார்த்திகேயன், சந்தானம், ஷங்கர் தாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ரீல்ஸ் குட் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த படத்திற்கு கோவிந்த் வசந்தா இசையமைத்துள்ளார். இந்த படத்தை இயக்குனர் லோகேஷ் கனகராஜ் 'ஜி ஸ்குவாட்' தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் வெளியிடுகிறார். இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், 'பைட் கிளப்' (Fight Club) திரைப்படத்தின் முதல் பாடலான 'யாரும் காணாத' பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் ட்ரெண்டாக்கி வருகின்றனர். 'பைட் கிளப்' (Fight Club) திரைப்படம் டிசம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.



# மாதவன் பட நடிகையின் இயக்கத்தில் யஷ்

பிரசாந்த் நீல் இயக்கத்தில் வெளியான 'கே.ஜி.எப்' படத்தின் மிகப்பெரிய வெற்றியின் மூலம் பிரபலமானவர் யஷ். இப்படத்தின் மூலம் ரசிகர்கள் மத்தியில் தனக்கான இடத்தை பிடித்த நடிகர் யஷ்ஷின் அடுத்தடுத்த படங்கள் குறித்த தகவல் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது. நடிகர் யஷ்ஷின் 19வது படத்தை இயக்குனர் கீது மோகன்தாஸ் இயக்குகிறார். இதில், சாய் பல்லவி கதாநாயகியாக நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. கேவிஎன் புரொடக்ஷன்ஸ் மற்றும் மாஸ்டர் மைண்ட் கிரியேஷன்ஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்தின் டைட்டில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்திற்கு 'டாக்ஸிக்' (TOXIC) என்று படக்குழு தலைப்பு வைத்துள்ளது. மேலும், இப்படம் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி வெளியாகவுள்ளதாக வீடியோ ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது. இந்த வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. இயக்குனர் கீது மோகன்தாஸ், தமிழில் சத்யராஜ் நடிப்பில் வெளியான 'பொம்முக்குட்டி அம்மாவுக்கு' படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர். அதுமட்டுமல்லாமல், மாதவன் நடித்த 'நள தமயந்தி' படத்தில் கதாநாயகியாக நடித்தார். மலையாளத்தில் 2019ஆம் ஆண்டு நிவின் பாலி நடித்த 'மூத்தோன்' என்ற படத்தை இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்னும் 2 தான்.. கோலியின் ஆல்டைம் சாதனையை முறியடிக்க இருக்கும் சிக்கந்தர் ராசா



அயர்லாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலாவது டி20 போட்டி நேற்று நடைபெற்றது. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் ஆடிய அயர்லாந்து அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 147 ரன்கள் எடுத்தது. அயர்லாந்து தரப்பில் பால்பிர்னி 32 ரன்னும், டெலனி 26 ரன்னும் எடுத்தனர். ஜிம்பாப்வே தரப்பில் ராசா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 148 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஜிம்பாப்வே அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 148 ரன்கள் எடுத்து கடைசி பந்தில் திரில் வெற்றி பெற்றது. ஜிம்பாப்வே தரப்பில் சிக்கந்தர் ராசா 65 ரன்கள் எடுத்தார்.இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 10 என ஜிம்பாப்வே அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி நாளை நடைபெற உள்ளது. இந்த போட்டியில் பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் சிறப்பாக செயல்பட்ட சிக்கந்தர் ராசா ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார். இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் 14வது ஆட்ட நாயகன் விருதை இவர் பெற்ற முகமது நபியை (14) சமன் செய்துள்ளார். டி20 கிரிக்கெட்டில் அதிக ஆட்டநாயகன் விருதை விராட் கோலி பெற்றுள்ளார். அவர் 15 முறை பெற்றுள்ள நிலையில் அவரின் சாதனையை முறியடிக்க இன்னும் 2 முறை ஆட்டநாயகன் விருதை ராசா பெற வேண்டும். இவர்களை அடுத்து சூர்யகுமார் யாதவ் 13 முறையும் ரோகித் சர்மா 12 முறையும் ஆட்டநாயகன் விருதை பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் சர்வதேச கிரிக்கெட்டில் அதிகமுறை ஆட்ட நாயகன் விருது வென்ற (6) விராட் கோலியை ஏற்கனவே சிகந்தர் ராசா (7) பின்னுக்கு தள்ளியது குறிப்பிடத்தக்கது.

# கோலிக்கு வயது 35 டெண்டுல்கரின் 100 சதங்கள் சாதனையை முறியடிப்பது கடினம் லாரா



வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் பிரையன் லாரா அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது:

இந்திய வீரர் விராட் கோலி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இதுவரை 80 சதங்கள் (ஒரு நாள் போட்டியில் 50 சதம், டெஸ்டில் 29 சதம், 20 ஓவர் கிரிக்கெட்டில் ஒரு சதம்) அடித்துள்ளார். சச்சின் டெண்டுல்கரின் 100 சதங்கள் சாதனையை எட்டுவதற்கு இன்னும் 20 சதங்கள் தேவை. இப்போது கோலிக்கு 35 வயதாகிறது. ஆண்டுக்கு அவர் 5 சதங்கள் அடித்தாலும் கூட டெண்டுல்கரின் சாதனையை சமன் செய்வதற்கு அவர் மேலும் 4 ஆண்டுகள் தொடர்ந்து விளையாட வேண்டியது அவசியம். அப்போது அவருக்கு 39 வயதாகி விடும். இதன்படி பார்த்தால் டெண்டுல்கரின் சாதனையை முறியடிப்பது மிக மிக கடினம்.

இன்னும் 20 சதங்கள் அடிப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படும். நிறைய வீரர்கள் தங்களது கிரிக்கெட் வாழ்க்கை முழுவதும் விளையாடி கூட 20 சதங்களை எடுத்ததில்லை. கோலியால் இதை செய்ய முடியாது என்று சவால் விடமாட்டேன். ஆனால் உங்களுடைய வயது எப்போதும், எதற்காகவும் நிற்காது. கோலியால் பல சாதனைகளை படைக்க முடியும். என்றாலும் 100 சதம் என்பது மிகவும் கடினம் என்றே தோன்றுகிறது.

அதே நேரத்தில் கோலியால் மட்டுமே இச்சாதனையை நெருங்க முடியும். அவரது கட்டுக்கோப்பான பேட்டிங், ஒழுக்கம், அர்ப்பணிப்புக்கு நான் ரசிகன். ஒவ்வொரு போட்டிக்கும் அவர் தயாராகும் விதம், அதற்காக அவர் வழங்கும் கடின உழைப்பு இவற்றை எல்லாம் பார்க்கும் போது அவருக்கு எப்படி ரசிகராக இல்லாமல் இருக்க முடியும். டெண்டுல்கர் போன்று அவரும் 100 சதங்கள் அடித்தால் மகிழ்ச்சி அடைவேன். டெண்டுல்கர் எனது அன்பான நண்பர். ஏற்கனவே சொன்னது மாதிரி விராட் கோலிக்கு நான் தீவிர ரசிகன்.

இந்த தலைமுறை கிரிக்கெட் வீரர்களில் திறமை வாய்ந்த பேட்டராக இந்தியாவின் சுப்மன் கில் திகழ்கிறார். வரும் ஆண்டுகளில் அவர் கிரிக்கெட் களத்தில் வெகுவாக ஆதிக்கம் செலுத்துவார். அவரால் என்னுடைய சாதனைகளையும் தகர்க்க முடியும். அவர் கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடும் பட்சத்தில், என்னுடைய முதல்தர கிரிக்கெட் சாதனையையும் (501 ரன்), டெஸ்ட் கிரிக்கெட்டில் எனது அதிகபட்ச ரன் சாதனையையும் (400 ரன்) நிச்சயம் தாண்ட முடியும். சுப்மன் கில் மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் செஞ்சுரி அடிக்கிறார். ஒரு நாள் போட்டியில் இரட்டை சதம் அடித்துள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நிறைய வெற்றிகரமான இன்னிங்ஸ் ஆடியுள்ளார். வருங்காலத்தில் அவர் நிறைய ஐ.சி.சி. தொடர்களை வெல்வார்.

இவ்வாறு லாரா கூறியுள்ளார்.

# ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி: ஸ்பெயின் அணியிடம் இந்தியா தோல்வி

13வது ஜூனியர் ஆண்கள் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் லீக்கில் மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் கால்இறுதிக்கு முன்னேறும்.

இதில் 'சி' பிரிவில் இடம் பிடித்துள்ள 2 முறை சாம்பியனான இந்திய அணி தனது 2வது லீக் ஆட்டத்தில் நேற்று வலுவான ஸ்பெயினை எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஸ்பெயின் அணியின் கையே ஓங்கி இருந்தது. முதலாவது நிமிடத்திலேயே ஸ்பெயின் கோல் கணக்கை தொடங்கியது. அந்த அணி வீரர் காப்ரி வெர்டெல் இந்த கோலை அடித்தார். 18வது நிமிடத்தில் பெனால்டி கார்னர் வாய்ப்பை ஸ்பெயின் கேப்டன் ரபி ஆந்த்ரே கோலாக்கினார். இதனால் ஸ்பெயின் அணி 20 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

33வது நிமிடத்தில் இந்திய அணி பதில் கோல் திருப்பியது. பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி ரோஹித் இந்த கோலை அடித்தார். முதல் கோல் அடித்த காப்ரி வெர்டெல் 41வது நிமிடத்தில் பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி மீண்டும் கோலடித்து தனது அணியின் முன்னிலையை அதிகரித்தார். 60வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி ஸ்டிரோக் வாய்ப்பை ரபி ஆந்த்ரே கோலாக மாற்றினார்.

கடைசி 5 நிமிடங்களில் இந்திய அணிக்கு 3 பெனால்டி வார்னர் வாய்ப்புகள் கிட்டியது. ஆனால் அதனை கோலாக்க இந்திய வீரர்கள் எடுத்த முயற்சியை ஸ்பெயின் கோல்கீப்பர் கேப்லாடெஸ் அருமையாக தடுத்து நிறுத்தினார்.

முடிவில் ஸ்பெயின் 41 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தி தொடர்ச்சியாக 2வது வெற்றியை சுவைத்து தனது பிரிவில் முதலிடம் வகிக்கிறது. 2வது ஆட்டத்தில் ஆடிய இந்திய அணி சந்தித்த முதல் தோல்வி இதுவாகும். முதலாவது ஆட்டத்தில் தென்கொரியாவை (42) வென்று இருந்தது.

இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் தென்கொரியா 41 என்ற கோல் கணக்கில் கனடாவை தோற்கடித்து முதல் வெற்றியை பதிவு செய்தது.

'டி' பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில் முன்னாள் சாம்பியனான பாகிஸ்தான் 40 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை தோற்கடித்து முதலாவது வெற்றியை தனதாக்கியது. அந்த அணி தனது தொடக்க ஆட்டத்தில் நெதர்லாந்துடன் (33) டிரா கண்டு இருந்தது. இதே பிரிவில் நடந்த இன்னொரு ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 53 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வீழ்த்தி முதல் வெற்றியை சொந்தமாக்கியது.

நாளை (சனிக்கிழமை) நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்திய அணி கனடாவை எதிர்கொள்கிறது. தனது பிரிவில் 3வது இடத்தில் இருக்கும் இந்தியா அரைஇறுதி வாய்ப்பில் நீடிக்க இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும். மற்றொரு ஆட்டத்தில் ஸ்பெயின்தென்கொரியா அணிகள் மோதுகின்றன.



**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**

**மனக்கவலை மாற்றல் அரிது**

**விளக்கம்:**

**ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேதனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடையதிருவடிகளைப்பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது**

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.